பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 26 திங்கட்கிழமை 09.06.2025 கதிர் 212

### இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பதற்காக சங்கு - சைக்கிள் கூட்டணிக்கு ஈபிடிபியின் ஆதரவைப் பெறுவது தொடர்பில் அந்தக் கட்சியின் தலைவர் ☞2

## பிரபாகரனின் ஆயுதங்கள் அனுப்பப்படவே இல்லை

### சுங்க திணைக்கள மேலதிக பணிப்பாளர் தெரிவிப்பு

விடுதலைப்புலிகள்இயக்கத்தின்தலைவர் பிரபாகரனுக்கு சொந்தமான ஆயுதங்கள் புலம்பெயர்அமைப்புக்களால்அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாக குறிப்பிடுவதை முழுமையாக நிராகரிக்கிறேன். 30 வருடகாலமாக விடுதலை புலிகள் இயக்கத்துடனான போர் நிலவியது. ஒருமுறை கூட கொழும்பு துறைமுகத்தின் ஊடாககொள்கலன்களில்ஆயுதங்கள்கொண்டு வரப்படவில்லை.நாடாளுமன்றசிறப்புரிமையில் இருந்துக் கொண்டு பொய்யுரைப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என சுங்கத் திணைக்களத்தின் மேலதிக சுங்க ☞2

## கொழும்பில் எதிர்க்கட்சி ஆட்சி அமைத்தே தீரும்

### ஹர்ஷன ராஜகருணா எம்.பி. தெரிவிப்பு

எதிர்க்கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுடன் பேச்சு நடத்தி பொது இணக்கப்பாட்டுடன் கொழும்பு மாநகர சபை உட்பட ஏனைய மாநகர சபைகளில் ஆட்சியமைப்போம். மக்களாணையை விளங்கிக் கொண்டு ஆளும்தரப்பு செயற்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண தெரிவித்தார்.

கம்பஹா பகுதியில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் ☞6

# யாழ்ப்பாணத்தில் 17 சபைகளிலுமே தமிழ் அரசுக் கட்சி ஆட்சியமைக்கும்

## குறுக்கே எவரும் வரவேண்டாம் சுமந்திரன் நேற்று எச்சரிக்கை

யாழ்ப்பாணத்தில்17சபைகளிலும்இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சி அமைக்கும் என அக்கட்சியின்பொதுசெயலாளர்எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.



இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களின்சத்தியப்பிரமாணநிகழ்வுநேற்றுநல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞2

## கொழும்பு மாநகர சபையில் கடும் போட்டி தொடர்கிறது

கொழும்பு மாநகர சபையின் மேயர் பதவிக்கு ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்திக்கும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் கடும் போட்டி நிலவுகிறது. கொழும்பு ☞8

## பிரதமர் அலுவலகத்தில் உள்விவகாரப் பிரிவு

ஜனாதிபதிசெயலகம்வெளியிட்ட சுற்றறிக்கைக்கு அமைய பிரதமர் அலுவலகத்தின் உள்ளக விவகார பிரிவை உருவாக்கும் நிகழ்வு பிரதமர்கலாநிதிஹரிணிஅமரசூரிய தலைமையில் கடந்த வெள்ளிக் கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இதற்கமைய பிரதமர் அலுவலகத்தின் உள்ளக விவகார பிரிவின் பிரதானியாக மேலதிக செயலாளர் (நிர்வாகம்) ருவன் ஜயசுந்தர, ஒருங்கிணைப்பு அதிகாரியாக நிர்வாக அதிகாரி கே.ஏ.எஸ்.ஸ்ரீபாலி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். ☞8

## யாழ்ப்பாணத்தில் ஒரிரு சபைகளில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைக்கும்

### அமைச்சர் சந்திரசேகரன் அறிவிப்பு

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஒரு சில உள்ளூராட்சி சபைகளில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைப்பதற்கான சூழல் ஏற்பட்டிருக்கின்றது. அதற்கான முயற்சிகளை நாங்கள் கண்டிப்பாக மேற்கொள்வோம் என கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழ்.காங்கேசன்துறைதொடருந்துநிலையத்தில் பொதிகள் போக்குவரத்து சேவை இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது செய்தியாளர்கள் எழுப்பியகேள்விக்குப்பதிலளிக்கும்போதேஇதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது பல்வேறு உள்ளூராட்சி சபைகளில் தீர்மானம் மிக்க சக்தியாக தேசிய மக்கள் சக்தி உள்ளது. ஆட்சியமைப்பது தொடர்பில் பல்வேறு தரப்புகள் எங்களோடு உரையாடுகின்றார்கள்.

இதுவரை காலமும் எங்களுக்கு எதிராக ஓரணியில் திரண்டு தூற்றியவர்கள் இன்று எங்களைக் காதலுடன் பார்க்கின்றார்கள்.

யாழ்ப்பாணம்மாவட்டத்தில்உருவாக்கப்படவுள்ள எந்தவொரு உள்ளூராட்சிசபைநிர்வாகங்களுக்கும் இடையூறாக நாங்கள் இருக்கமாட்டோம். கடந்த காலங்களில் எங்களைத் தூற்றி இனவாத ரீதியாக தங்களின் இருப்பைத் தக்கவைத்துக்கொண்ட எந்தவொரு அணியுடனும் சேரப்போவதில்லை.

யாழ். மாவட்டத்தின் ஒரு சில உள்ளூராட்சி சபைகளில்தேசியமக்கள்சக்திஆட்சியமைப்பதற்கான சூழல்ஏற்பட்டிருக்கின்றது. அதற்கான முயற்சிகளை நாங்கள் கண்டிப்பாக மேற்கொள்வோம்.

யாழ். மாநகர சபையில் நாங்கள் போட்டியிடுவோமாக இருந்தால் மேயர் வேட்பாளராகக் கபிலனையே நிறுத்துவோம் என்றார்.

## முறைகேடாக சிறைக் கைதிகள் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிப்பு

### விசாரணைகளில் உண்மை வெளியானது

ஜனாதிபதி பொதுமன்னிப்பை முறைகேடான வகையில் பயன்படுத்தி ஒருசில சிறைக்கைதிகள் வெசாக் தினத்தன்று விடுவிக்கப்பட்டுள்ளமை விசாரணைகளில் வெளிவந்துள்ளது. இந்த முறைகேடான செயற்பாட்டுடன் தொடர்புடையசிறைச்சாலைஅதிகாரிகள் உட்படஅதனுடன்தொடர்புடைய ☞6

## அ’புரம் சிறைச்சாலை அத்தியட்சகர் கைது

அனுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகர் இன்று (8) மதியம் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டார். ஜனாதிபதி பொது மன்னிப்பை தவறாகப் பயன்படுத்தி கைதிகளை விடுவித்தமை தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்துவரும்விசாரணைகளுக்கு அமைவாக குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

## டெங்கு, சிக்கன்குனியா தீவிரம்

நாட்டில்நிலவும்மழையுடனான காலநிலையால் டெங்கு மற்றும் சிக்கன்குனியா நோய் பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில் மே 31வரையாள காலப்பகுதியில் இனங்காணப்பட்ட டெங்கு நோயாளர்களில் சதவீதத்தில் 5 முதல் 19 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் வீதம் உயர்வடைந்துள்ளது என சுகாதாரத்துறை அமைச்சு அறிவுறுத்தியுள்ளதை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைகளில் டெங்கு மற்றும் சிக்கன்குனியா நோய் ஒழிப்புக்கான நடவடிக்கைகள் குறித்து கல்வி அமைச்சு விசேட ஆலோசனை வழிகாட்டல் தொடர்பான சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது.

பாடசாலைகளில் டெங்கு மற்றும் சிக்கன்குனியா நோய் ஒழிப்புக்காக முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கல்வி அமைச்சு விசேடஆலோசனைவழிகாட்டல் சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது.

பாடசாலை சூழலில் நுளம்பு பரவலுக்கு ஏதுவான வகையில் நீர் தேங்கி நிற்கும் இடங்கள் இனங்காணப்பட்டால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறித்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலை மற்றும் பாடசாலையை அண்மித்த சூழலில் நுளம்பு பரவாமல் இருப்பதற்குரிய பாதுகாப்பான சூழலை பேண்வதற்காக இதற்கு முன்னர் வெளியிட்ட 2010/22 மற்றும் 30/2017 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு ஆலோசனை வழிகாட்டல்களுக்குமேலதிகமாக முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகளை ☞6

### முறைகேடாக பொதுமன்னிப்பில் கைதி விடுதலை;

## சிறைக் கட்டமைப்பிலுள்ள ஊழல் வெளிப்பட்டுள்ளது

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பை முறைகேடாகப் பயன்படுத்தி கைதியை விடுதலை செய்துள்ளமை சிறைச்சாலைக் கட்டமைப்பில் உள்ள ஊழல் மற்றும் வியாபாரத்தை வெளிப்படுத்தியுள்ளது. ஜனாதிபதி பொதுமன்னிப்பு அதிகாரத்தை முறைகேடானவகையில்பயன்படுத்திய முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, கோட்டபய ராஜபக்ச ஆகியோரின் பட்டியலில் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இணையமாட்டார் என்று எதிர்பார்க்கிறோம் என சிறைக் ☞2

காலைக்கதிர் Kalāikkathir

## இனி இது .....

டக்ளஸ்தேவானந்தாவுடன் புளொட் தலைவர் சித்தார்த்தனும் ஈபிஆர்எல்எவ் தலைவர் பிரேமச்சந்திரனும் நேரம் ஒதுக்கிவிட்டு, அது பற்றிய செய்திகள் வெளியாகிய பின்னர் ஏற்பட்ட அழுத்தங்கள் காரணமாகப் பின்வாங்கிப் பதுங்கிவிட்டது தெரிந்த கதை.

நேற்று தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பாகிய பேட்டிஒன்றில் சித்தார்த்தனிடம் இது பற்றிக் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அசடு வழிய அவர் வழங்கிய பதிலை அனைவரும் ஒருதடவை பார்க்கவேண்டும். கூடவே அவர் தனது பண்பியல்பு பற்றியும் உளறிக்கொட்டிவிட்டார்.

டக்ளஸைச் சந்திக்கத் தான் கேட்டது தனிப்பட்ட நட்பின் காரணமாகவே தவிர, தமிழ் தேசிய பேரவையின் அனுமதியுடனோ ஜனநாயகத்த தமிழ்த் தேசியக் கூட்டணியின் அனுமதியுடனோ அல்ல என்று விளக்கமளித்தார் அவர். ஆனாலும், டக்ளஸுடன் தான் உள்ளாட்சித் தேர்தலில் அவரது ஆதரவு யாருக்கு என்பது தொடர்பில் வினவினார் எனவும், அதற்கு தானொரு கூட்டத்தில் இருப்பதால் மறுநாள் நேரில் வாருங்கள் பேசலாம் என்று அவர் தெரிவித்தார் என்றும் கூறினார். இதன் மூலம் உள்ளாட்சி சபைகளில் ஆட்சியமைக்க ஆதரவு கேட்டு டக்ளஸைச் சந்திக்கத் தான் ஏற்பாடு செய்திருந்தார் என்பதை அவர் ஒத்துக்கொண்டார். ஆனால், அவரது தற்போதைய தலைவரான கஜேந்திரகுமாரோ, அவர் அப்படியொரு சந்திப்புக்கு ஏற்பாடே செய்யவில்லை என்று தன்னிடம் தெரிவித்திருந்தார் என்று கொழும்பில் வைத்து ஊடகங்களிடம் கூறியிருந்தார்.

இப்போது சித்தார்த்தன் சொல்வது சரியாக கஜேந்திரகுமார் சொல்வது சரியாக என்று ஒரு விவாதம் நடத்தவேண்டும். என்றாலும் ஏற்கனவே, இத்தகைய சந்திப்புக்கு சித்தார்த்தன் கேட்டார் என்று டக்ளஸ் தேவானந்தாவும் கூறியிருந்தார். சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறுவதுபோன்று ஜனநாயகப்படி செயற்பட்டால் கஜேந்திரகுமார் சொல்வது பொய், சித்தார்த்தன் கூறுவது மெய். ஜனநாயகத்தில் எப்போதும் பெரும்பான்மைக்குத்தானே மதிப்பு (நான் சொல்லவில்லை, சுரேஸ் சொன்னது). ஆக, கஜேந்திரகுமாருக்குத் தனது கொள்கைக் கூட்டில் இருக்கும் தலைவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது தெரியவில்லை. அதுமட்டுமல்ல அவர்களின் செயல்கள் வெளியே தெரிய வந்த பின்னரும்கூட கொள்கைக் கூட்டிலுள்ள தலைவர்களால் கஜேந்திரகுமாரை இலகுவில் ஏமாற்றிவிட முடிகின்றது. இதன் மூலம் அவர் ஒரு சின்னப்பிள்ளை என்பதை மற்றைய தலைவர்கள் இலகுவில் நிரூபித்துவிடுகிறார்கள்.

அதுபோகட்டும், அந்தப் பேட்டியில் சித்தார்த்தன் தன்னைப் பற்றிய மற்றொரு முக்கியமான விடயத்தையும் பொதுவெளியில் மக்களுக்குப் பகிரங்கப்படுத்தினார். தனக்கும் டக்ளஸுக்கும் இடையிலான நெருங்கிய நட்பு 40 வருட காலங்களாகத் தொடர்கிறது என்றார் அவர். தான் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொலைபேசியில் உரையாடுவது என்பது நாளாந்த நிகழ்வு, அதையெல்லாம் ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளமுடியாத அளவிற்குச் சாதாரண நிகழ்வு என்று அவர் தெரிவித்தார். அதைவிட முக்கியமாக அவர் மற்றொரு விடயத்தையும் தெரிவித்தார். அதுதான் அவரது தற்போதைய தலைவரான கஜேந்திரகுமாரின் நெஞ்சிலேயே ஏறியிருந்து குத்தியதற்குச் சமமாக இருந்தது. அது என்னவென்றால், தமிழ் இனப்படுகொலையின் முதன்மைச் சூத்திரதாரி என்று குற்றஞ்சாட்டப்படும் கோட்டாபய ராஜபக்சவுடனும் தனக்கு நெருக்கமான நட்பு உண்டு, டக்ளஸுடன் பேசுவதைப் போன்றே கோட்டாவுடனும் தான் பேசுவது சாதாரணமாக விடயம் என்று தெரிவித்தார்.

இலங்கையில் நடந்தது இனப்படுகொலைதான், அதற்காக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்கிறார் கஜேந்திரகுமார். அவர் ஒற்றைக் காலில் நின்றாலும் எதுவும் நடக்காது என்பது வேறு விடயமானாலும் அவரது பிரதான அரசியல் முழக்கம் அதுதான். ஆனால், அவரது கொள்கைக் கூட்டில் உள்ள பங்காளித் தலைவரோ அதே இனப்படுகொலைக்கு முதன்மைப்பாத்திரவாளி என்று குற்றஞ்சாட்டப்படும் கோட்டாபாய ராஜபக்சவுடன் தனக்கிருக்கும் நட்பு மிகவும் உறுதியானது, நெருக்கமானது என்கிறார்.

ஒரே கொள்கைக் கூட்டுக்குள், தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள் என்று கூறும் ஒரு தலைவரும் அந்த இனப்படுகொலைக்கு முதன்மைச் சூத்திரதாரியைத் தனது நெருங்கிய நண்பர், அவரை அடிக்கடி அழைத்துப் பேசுவது சாதாரண விடயம் என்று கூறும் ஒரு தலைவரும் உள்ளார்கள். இது என்ன கொள்கைக் கூட்டடா சாமி?

கஜேந்திரகுமார் இதற்கும் ஒரு செய்தியாளர் சந்திப்பு நடத்திய முழு விளக்கம் தரவேண்டும் என்று எதிர்பார்த்திருக்கின்றோம்.

சித்தார்த்தன் தனது தலைவருக்குத் தெரியாமல் தான் டக்ளஸுடன் பேசினார் என்று சொல்வது ஒன்றும் புதிதல்ல. அவர் எப்போதுமே அப்படித்தான். கூட்டமைப்புக்குள் இருக்கும்போதும் சம்பந்தருக்கு முன்பாக எதுவும் பேசாமல் அவர் சொல்வதை தலையாட்டி ஏற்றுக்கொள்வார், வெளியில் வந்து அதற்கு மாறான ஒன்றைச் செய்வார். கூட்டமைப்பாக இருந்தபோதும் அவர் இப்படித்தான் செயற்பட்டார். கூட்டமைப்பிற்குள் இருந்தபடி அது எடுக்கும் முடிவுகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்வார், ஆனால் வெளியில் வந்ததும் அதனை குழப்பும் வித்தத்தில் ஊடகவியலாளர்களிடம் கருத்துக்களைப் பகிர்வார். கட்சித் தலைமைக்கோ, கூட்டுத் தலைமைக்கோ கொள்கைக்கோ அவர் எப்போதும் கடுமையான விசுவாசியாக இருந்ததில்லை. இந்தப் பக்கமும் அரசியல், அதற்கெதிராக மற்றப் பக்கத்திலும் மிக நெருக்கமான நட்பு என்பது அவர் காலம் காலமாகத் தொடரும் அரசியல்தான். அது தெரியாமல், புரியாமல் அவரை உள்ளே சேர்த்துவிட்டு, அவர் தனக்குச் சொல்வதை நம்பி பகிரங்கமாகக் கருத்துச்சொல்ல முற்படும் கஜேந்திரகுமார்தான் கடைசியில் முட்டாளாக வேண்டிவரும்.

இவ்வளவு நாளும் கூட்டமைப்பிற்குள் புளொட் இருக்கும்போது இதுவெல்லாம் உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா, தமிழ் அரசுக் கட்சிக்கு ஆதரவாக இருந்தபோது அவரது குணம் தெரியவில்லையா என்றெல்லாம் கிளம்பி வராதீர்கள். அது நன்கு தெரிந்திருந்ததால்தான், தொடக்கத்திலேயே கஜேந்திரகுமாருக்கு நிலமையைப் புரிய வைக்கிறேன். கேட்டால் நல்லது. கெடுகுடி சொற்கேளாது. .

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## யாழ்ப்பாணத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய கட்சிகள் போன்று ஒரு சந்திப்புக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு பின்னர் அனைவருக்கும் தெரிந்த பின்பு மறுக்கும் அல்லது சந்திப்புகளை பிற்போடும் செயற்பாடுகள் தமிழ் அரசுக் கட்சிக்குள் நடைபெறுவதில்லை.

கூட்டாட்சி (சமஷ்டி) அடிப்படையில் ஆட்சி அதிகாரங்கள் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவே எமது கட்சி உருவாக்கப்பட்டது. அதற்காகவே அனைத்துத் தேர்தல்களிலும் போட்டியிடுகின்றோம். 1956ஆம் ஆண்டு முதல் இன்று வரை தமிழ் மக்கள் பிரதானமாக நம்புவது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை மட்டும்தான்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னரும் மக்களது ஆணைக்கு நாங்கள் தலை வணங்குகிறோம் என வெளிப்படையாகச் சொன்னேன். மக்கள் தவறாக முடிவெடுப்பதில்லை. என்பிபிக்கு வாக்களித்த விவகாரத்தில் கூட, அது மக்களுடைய தீர்ப்பு. ஆளும்தரப்பு உட்பட அனைத்துக் கட்சிகளுக்கும் மக்களது தீர்ப்பினை மதிக்குமாறு நீண்டகாலமாக நாங்கள் கோரி வருகின்றோம்.

ஒரு குறிப்பிட்ட சபையில், தமிழ் அரசுக் கட்சி அதிக ஆசனங்களைப் பெற்றிருந்தால் மக்களின் ஆணையை மதித்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அந்த சபையில் ஆட்சியமைக்க ஆதரவளிக்க வேண்டியது உங்களுடைய ஜனநாயகக் கடமை. இதனை நாங்கள் 2018ஆம் ஆண்டிலேயே சொல்லி இருக்கிறோம்.

சந்திப்புகள் தொடர்பாக சில உணர்வுபூர்வமான விடயங்கள் இருக்கின்றன. நாங்கள் அதனை மதிக்கின்றோம். அதனைப் புறம்தள்ளவில்லை. கஜேந்திரகுமாருடனான சந்திப்பு அவரது வீட்டிலேயே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. நானும் அதற்கு மறுப்பு தெரிவிக்கவில்லை. ஆனாலும் அவர் இடையில் தும்புக்கட்டை கதை ஒன்றைக் குறிப்பிட்டிருந்தார். இந்த விவகாரம் எமது கட்சிக்குள் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது. எனவே நாம் சந்திப்புக்கான இடத்தை மாற்றியிருந்தோம். எனவே சந்திப்புக்கான இடம் குறித்த விவகாரத்தில் மக்களுக்கு ஒரு உணர்வுபூர்வமான தாக்கம் ஏற்பட்டிருந்தால் அதனையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

ஒட்டுமொத்தமாக இந்த விடயத்தைப் பார்க்கின்றபோது நாங்கள் யாருடனும் கூட்டாட்சி அமைக்கவில்லை. மக்கள் எமக்கு வழங்கிய ஆணையின் பிரகாரம் நாங்கள் அதிகாரத்தை கோருகின்ற அரசியற் கட்சி. அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஆணையை மக்கள் வழங்கிய பிறகு அதற்கு குறுக்கே எவரும் வரவேண்டாம் என எச்சரிக்கை விடுக்கிறோம்.

யாழில் உள்ள 17 சபைகளில் ஒன்றிரண்டு சபைகளில் எமக்கு பெரும்பான்மை இல்லாமல் இருக்கலாம். நாங்கள் சொன்ன கோட்பாட்டை ஏற்றுக்கொண்டதாக சொல்லிவிட்டு, அதனை மறுதலிப்பதற்காக கபடத்தனமாக பலர் செயற்படும் காரணத்தால், 17 சபைகளிலும் நாங்கள் ஆட்சி அமைப்போம்.

மக்களின் ஆணை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத்தடவை தேசிய மக்கள் சக்தியை விட கூடுதலாக எடுக்கும் வகையில் மக்கள் மாற்றியமைத்திருக்கிறார்கள். ஏனையவர்களால் தேசிய மக்கள் சக்தியை மேவி வர முடியவில்லை.

தமிழ் மக்களை, தமிழ்த் தேசியத்தை நிமிர வைத்திருக்கிற ஒரே கட்சி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி. அவ்வகையிலான மக்கள் ஆணையை பெற்ற நாங்கள் எல்லா சபைகளிலும் நிர்வாகத்தை அமைப்பதற்கு உரித்துடையவர்கள். அதற்கு குறுக்கே எவரும் வர வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கிறோம் எனத் தெரிவித்தார்.

## சிறைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழுவின் நிறைவேற்று அதிகாரி சட்டத்தரணி சேனக பெரேரா தெரிவித்தார்.

சிறைக் கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அநுராதபுரம் சிறையில் இருந்த அதுல திலகரத்ன என்ற கைதி வெசாக் பண்டிகையன்று ஜனாதிபதி பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பல விடயங்கள் வெளிப்பட்டுள்ளன. இருப்பினும் ஜனாதிபதி ஊடக பிரிவு 2025.05.07 ஆம் திகதி வெளியிட்ட ஊடக அறிக்கையில் '2025.05.06 ஆம் திகதியன்று ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட 06ம01 உத்தேச ஜனாதிபதி பொது மன்னிப்பு அறிக்கை.05.12.2025 இலக்க 388 கைதிகள் பெயர் பட்டியலில் இந்த கைதியின் பெயர் இருக்கவில்லை' என்று குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதியால் பொதுமன்னிப்புக்கு வழங்கப்பட்ட பெயர் பட்டியலை கொண்டு சிறைச்சாலை அதிகாரிகள் முறைகேடான வகையில் இந்த கைதிக்கு விடுதலை வழங்கியுள்ளனர் என்ற பாரதூரமான சந்தேகம் தோற்றம் பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து சிறைச்சாலை தலைமையகம் உரிய தெளிவுப்படுத்தலை முன்வைக்கவில்லை.

ஜனாபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்படாத அல்லது போலியான விடயங்களை முன்வைத்து பொதுமன்னிப்பு பெற்றுக்கொண்ட கைதி தொடர்பான பொறுப்பினை சிறைச்சாலை அதிகாரிகள் பிற தரப்பினருக்கு பொறுப்பாக்க முடியாது. சிறைச்சாலைக்குள் அதிகாரிகள் முறையற்ற வகையில் செயற்படுவதை நன்கு அறிவோம். பணத்துக்காக சிறைச்சாலை வைத்தியசாலையில் ஒருசிலர் அனுமதிக்கப்பட்ட சம்பவங்களையும் நன்கு அறிவோம்.

காரணமின்றி சிறைச்சாலை வைத்தியசாலையில் பிரபல்யமானவர்களை அனுமதிப்பதற்கு இலட்சக்கணக்கில் பணம் கோரும் கலாச்சாரம் இன்றும் உள்ளது. கடுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள சிறைச்சாலைக்குள் கைதிகளிடம் தொலைபேசிகள் உள்ளன. இதற்கு ஒருசில ஊழல்மிக்க அதிகாரிகள் ஒத்தாசை வழங்குகிறார்கள். இது சிறைச்சாலையின் சூட்சமமான வியாபாரமாகும்.

சிறைச்சாலைக்குள் நிலவும் மோசடியான செயற்பாடுகள் குறித்து தொடர்ச்சியாக குறிப்பிட்டுள்ளோம். அரச சம்பளம் மற்றும் வரப்பிரசாதங்களை பெற்றுக்கொண்டு பல்வேறு வியாபாரங்களில் ஈடுபடும் ஊழல்மிக்க அதிகாரிகளின் செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டு வர ஆளும்தரப்பு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி மன்னிப்பை முறைகேடான வகையில் பயன்படுத்திய இந்த சம்பவத்துடன் தொடர்புடைய தரப்பினரை சட்டத்தின் முன் முன்னிலைப்படுத்த வேண்டும்.

ஜனாதிபதி பொதுமன்னிப்பு அதிகாரத்தை முறைகேடான வகையில் பயன்படுத்திய முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, கோட்டபய ராஜபக்ச ஆகியோரின் பட்டியலில் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இணையமாட்டார் என்று எதிர்பார்க்கிறோம்.

## பிரபாகரனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட தெரிவித்தார்.

சுங்கத் திணைக்களத்தின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுங்கத்துக்குள் கடந்த ஜனவரி மாதமளவில் கொள்கலன் நெரிசல் ஏற்பட்டதை தொடர்ந்து கண்காணிப்பு குழு ஒன்று நியமிக்கப்பட்டு, அவதானமற்ற நிலையில் உள்ள கொள்கலன்களை பரிசோதனையின்றி விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இருந்து அவதானமற்ற நிலையில் உள்ள கொள்கலன்கள் பரிசோதனையின்றி விடுவிக்கப்படுகின்றன.

அவதானமற்ற நிலையில் உள்ள கொள்கலன்களை பரிசோதனையின்றி விடுவித்ததால் குறுகிய காலத்துக்குள் கொள்கலன் நெரிசலுக்கு தீர்வு காண முடிந்தது. 323 கொள்கலன்களில் என்ன இருந்தது என்பது குறித்து பல்வேறு தரப்பினர் மாறுப்பட்ட பல கருத்துக்களை குறிப்பிட்டுள்ளார்கள். கைத்தொழிலுக்கு தேவையான மூலப்பொருட்கள், துணி வகைகள், இரசாயன பதார்த்தங்கள், தேசிய உற்பத்தியாளர்களால் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகன உதிரிபாகங்கள், மின்சாதன பொருட்கள், விலங்கு தீவனம், கடதாசி, உரம், சீமெந்து உள்ளிட்ட பொருட்களே இந்தக் கொள்கலன்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

323 கொள்கலன்களில் பெரும்பாலானவை இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவையாகும். இதற்கு மேலதிகமாக இந்தோனேசியா, ஹொங்கொங், மலேசியா, தென்கொரியா, சிங்கப்பூர், சுவிஸ்லாந்து, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளில் இருந்தும் கொள்கலன்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இந்த கொள்கலன் இறக்குமதியாளர்களின் சகல விவரங்களும் சுங்கத்திடம் உள்ளன. நிதியமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட குழுவுக்கும், குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கும், இந்த ஆவணங்களை ஒப்படைத்துள்ளோம். சகல ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டதன் பின்னரே கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டன.

நூற்றுக்கு 60 சதவீதமான கொள்கலன்கள் பரிசோதனையின்றி விடுவிக்கப்படுகின்றன. இது ஒன்றும் சுங்கத்துக்கு புதிதல்ல, எதிர்காலத்திலும் பரிசோதனையின்றி கொள்கலன்கள் விடுவிக்கப்படும். அனைத்தையும் பரிசோதிக்க வேண்டுமாயின் கொள்கலன்களை விடுவிக்க குறைந்தது மூன்று மாதங்களேனும் செல்லும். சட்டவிரோதமான பொருட்கள் இறக்குமதி செய்யப்படுமாயின் அது குறித்து புலனாய்வு தகவல்கள் முன்கூட்டியதாக கிடைக்கப்பெறும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் முழுமையாக பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

323 கொள்கலன்களில் தங்கம், ஆயுதங்கள், போதைப்பொருள் இருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது. இந்த கொள்கலன்களில் சட்டவிரோதமான பொருட்கள் ஏதும் உள்ளடங்கவில்லை என்பதை உறுதியாக குறிப்பிட முடியும். குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் விசாரணைக்குரிய சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கியுள்ளோம்.

இந்த கொள்கலன் விடுவிப்புக்கு வெளியாட்களில் இருந்து எவ்வித அழுத்தமும் ஏற்படவில்லை என்பதை உறுதியாக குறிப்பிட முடியும்.

துறைமுக அமைச்சர் பிமல் ரத்நாயக்க கொள்கலன் விடுவிப்புக்கு எவ்வித அறிவிப்பையும் விடுக்கவில்லை என்பதையும் தெளிவாகக் குறிப்பிடமுடியும். அனைத்துத் தகவல்களையும் வெளியிடமுடியாது. இருப்பினும் அதிகாரமிக்க தரப்புக்கு சகல ஆவணங்கள் மற்றும் தகவல்களை வழங்கியுள்ளோம். இறக்குமதியாளர்கள் தொடர்பான இரகசியங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு சுங்கத்திணைக்களத்துக்கு

தொடர்ச்சி 8 ம் பக்கம்.....

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் அரசுக் கட்சியின் உள்ளாட்சி உறுப்பினர்கள் நேற்று யாழ்ப்பாணம், திருமலையில் பதவியேற்பு



இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களின் பதவியேற்பு நிகழ்வு நேற்று நடைபெற்றது.

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம், பொதுச் செயலாளர் சுமந்திரன், நிர்வாகச் செயலாளர் குலநாயகம் ஆகியோரின் பங்கேற்புடன் நடைபெற்ற குறித்த நிகழ்வில் மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்..

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றியீட்டிய மற்றும் பட்டியல் ஆசனங்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்க நேற்றுதிருகோணமலையில்உள்ள மாவட்ட கட்சி பணிமனையில் பதவியேற்றுக்கொண்டனர்.







கட்சியின்மாவட்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் அவர்களது முன்னிலையில் உறுப்பினர்களாக பதவியேற்றுக்கொண்டனர். குச்சவெளி, தம்பலகாமம், வெருகல், மூதூர், திருகோணமலை மாநகரசபை, திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை ஆகிய பகுதிகளில் இலங்கை தமிழ் அரசு கட்சி சார்பில் வேட்பாளர்கள் வெற்றிபெற்றிருக்கின்றனர். இதில் திருகோணமலை மாநகர சபையின் முதல்வராகத் தமிழ் அரசுக்கட்சியைச்சேர்ந்த ஒருவர் நிறுத்தப்படவுள்ளார்.





## மழை எச்சரிக்கை

நாட்டின் தென்மேற்குப் பகுதியில் நாளை மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதோடு, நாட்டைச் சூழவுள்ள கடற் பிராந்தியங்களில் அவ்வப்போது பலத்த காற்று வீசக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதுதொடர்பில்வளிமண்டலவியல் திணைக்களத்தால்வெள யிடப்படும் அறிக்கைகள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறும் அத்திணைக்களம் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை பெய்யக்கூடுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களில் மாலை அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும், வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் அவ்வப்போது மணிக்கு சுமார் 30-40 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.



இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள பொதுமக்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

## ரி–56 துப்பாக்கிகள் இரண்டு வவுனியா வீட்டில் மீட்பு

வவுனியாஹொரவப்பொத்தானை வீதி இறம்பைக்குளம் பகுதியில் வீட்டு வளாகத்திலிருந்து ரி-56 ரக துப்பாக்கிகள் இரண்டுடன் 450இற்கு மேற்பட்ட ரவைகள் மீட்கப்பட்டன.

வீட்டின் உரிமையாளரினால் கழிவு தொட்டி ஒன்று அமைப்பதற்காக வீட்டின் பாவனையற்ற வாயில் முன்பாக குழியொன்றினை ஜேசிபி (மூளீய) உதவியுடன் நேற்றுக் காலை வீட்டின் உரிமையாளர் தோண்டியுள்ளார். இதன்போது அக்குழியினுள் துப்பாக்கி மற்றும் ரவைகள் காணப்பட்டதைத் தொடர்ந்து வீட்டின் உரிமையாளர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியிருந்தார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார்மற்றும்தடவியல்பிரிவுபொலிஸார் வீட்டின் உரிமையாளர் மற்றும் வேலையாட்களிடம்விசாரணைகளை முன்னெடுத்திருந்தமையுடன் குழியினுள் உரைப்பையினுள் கட்டப்பட்ட நிலையில்காணப்பட்ட துப்பாக்கி மற்றும் ரவைகளை மீட்டெடுத்திருந்தனர்.

அதன் பின்னர் தடவியல் பிரிவு பொலிஸார் பாகுப்பாய்வுகளை மேற்கொண்டதோடு, மீட்கப்பட்ட துப்பாக்கி மற்றும் ரவைகள் 20 வருடங்களுக்கு மேற்பட்டதாக இருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டதுடன் அவை ரி-56 ரக இரு துப்பாக்கிகளும் 450இற்கு மேற்பட்ட ரவைகளும் எனத் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட துப்பாக்கி மற்றும் ரவைகளை பொலிஸார் எடுத்து சென்றமையுடன் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்ற உத்தரவுடன் அவற்றை கொழும்புக்கு அனுப்புவதற்குரிய நடவடிக்கையினையும் முன்னெடுத்துள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தக்க எதிர்வினை இல்லா வெப்பம்

கடந்த சில வாரங்களாக வடக்கு மற்றும் கிழக்கு மண்டலங்களை கடும் வெப்ப அலை தீவிரமாக தாக்கி வருகிறது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அக்கறைப்பற்று பகுதிகளில் வெப்பநிலை 38°C வரை உயர்ந்துள்ளது. இது சாதாரண வெப்ப நிலையை விட 5°C – 7°C அதிகமாகும். குறிப்பாக, காலை 10 மணிக்குமேல் வெளியே செல்ல முடியாத நிலைமையே காணப்படுகிறது.

இவ் வெப்ப அலை காரணமாக, முதலாவது பாதிக்கப்படுவது விவசாயத் துறை. ஏற்கெனவே பருவமழை காலங்களில் தேக்கமடைந்த நெற்செய்கைகள் இப்போது வெயிலில் கருகி கிழிந்துள்ளன. குடிநீர் மட்டுமே அல்லாமல், பசுமை நிலங்களை ஊற்றி வந்த பாசனக் கால்வாய்கள் சுண்டிக்காய்ந்து விட்டன. இது, சிறு விவசாயிகள் வாழ்க்கையை முடிவுக்கு கொண்டு செல்லும் நிலையில் உள்ளது.

இரண்டாவது தாக்கம், குடிநீர் தட்டுப்பாடு. பல கிராமங்களில் கிணறுகள் வறண்டு விட்டன. அரசின் நிவாரணம் மிகவும் மெதுவாக நடந்து வருகின்றது. நீர் வண்டிகள் தினசரி வரவில்லை. பல இடங்களில் மக்கள் தங்களைத் தாங்களே தனியாரிடமிருந்து தண்ணீர் வாங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இது ஏழை மக்கள் மீது அதிக நிதிச் சுமை ஏற்படுத்தியுள்ளது.

மூன்றாவது, மனித உடல் நலத்துக்கு நேரும் பாதிப்புகள். வயதானவர்கள், குழந்தைகள் மற்றும் நோயுற்றவர்கள் மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்படுகின்றனர். வெப்பக் காய்ச்சல், உடலின் நீர்ச்சத்து இழப்பு (dehydration), மூச்சுத் திணறல் போன்றவை மருத்துவமனைகளில் அதிகரித்துள்ளன. ஆனால், இந்த சூழ்நிலையில் கூட, அரசு பொதுமக்களுக்கான முன்னெச்சரிக்கை அறிவுறுத்தல்களையே வெளியிடத் தவறியுள்ளது.

இத்தகைய சூழ்நிலைக்கு காரணமானது காலநிலை மாற்றமே. ஆனால் அரசின் மந்தமான பதிலும், முன்னேற்பாடின்றியும் நிகழும் செயல்பாடுகளும் கவலையளிக்கின்றன. திடீர் வெப்ப அலைக்கு எதிரான நேரடி நடவடிக்கைகள் ‘தற்காலிக குடிநீர் மையங்கள், விவசாய மானியங்கள், சுகாதார முகாம்கள்’ இவை அவசியமாகின்றன.

இது சாதாரண வெப்பம் அல்ல – சமூகம் மொத்தமாக சிந்திக்க வேண்டிய அழைப்பு. காலநிலை மாற்றத்திற்கு மையமான நம் வாழ்வியலை மாற்றும் காலம் இது. மத்திய மற்றும் மாகாண அரசுகள் இதனை ஆழமாக எடுத்துக்கொண்டு உடனடி, நீடித்த தீர்வுகளை கொண்டு வர வேண்டும். இல்லையெனில், வெப்பத்தால் வாடும் மக்கள் நாளைய தினங்களில் வாழ்வதற்கே போராட வேண்டிய நிலை உருவாகலாம்.




## ட்ரோன் தாக்குதலில் உக்ரைனின் வலிமை! பேரழிவை சந்தித்த ரஷ்ய வான்படை!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

போர் முனைகளில் இருந்து பல ஆயிரக்கணக்கான கிலோ மீற்றர்கள் தூரத்துக்கு அப்பால் ரஷ்யாவின் ஆர்ட்டிக் மற்றும் தூர கிழக்கு சைபீரியாப் பகுதிகளில் அமைந்திருந்த முக்கிய விமானத் தளங்களின் மீதே மிகப் பெருமெடுப்பிலான ட்ரோன் வான்வழித்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.



### ரஷ்யாவின் பேர்ல் ஹார்பர் :

ரஷ்ய விமானத் தளங்கள் மீதான தாக்குதலை அமெரிக்க நாட்டின் பேர்ல் ஹார்பர் (Pearl Harbour ) தாக்குதலுக்கு ஒப்பானது என இராணுவ வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

உக்ரைனின் ஆச்சரியமான பேரழிவை ரஷ்யாவிற்கு தந்த தாக்குதலாகும். ஜப்பானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையில் எந்தப் போர் இல்லாதபோது பேர்ல் ஹார்பர் மீதான தாக்குதல் நடந்தமை குறிப்பிடத்தக்கது.

கிரெம்ளின் தொடர்ந்து உக்ரைனின் நகரங்கள் மீது பாரிய ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தி வரும் நிலையில், உக்ரைனிய தாக்குதல் மாஸ்கோவை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

உக்ரைனிய தரப்பு அறிக்கைகளின்படி, நாற்பது விமானங்கள் தாக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கையைத் திட்டமிட்டு செயல்படுத்திய உக்ரைனின் பாதுகாப்பு சேவை - இந்தத் தாக்குதல் ரஷ்யாவின் க்ரூஸ் ஏவுகணைகளை ஏந்திச் செல்லும் திறன் கொண்ட 34 சதவீத மூலோபாய குண்டுவீச்சு விமானங்களை அழித்ததாகக் கூறுகிறது.

செல்லப்பட்டுள்ளன என்ற தகவலை உக்ரைன் பாதுகாப்புச்சேவை வட்டாரங்கள் வெளியிட்டிருக்கின்றன.

வெடிகுண்டு தாங்கிய ட்ரோன்கள் ட்ரக் கொள்கலன்களின் கூரைப் பகுதிகளுக்குள் மரத்தினால் வடிவமைக்கப்பட்ட மறைவிடங்களுக்குள் ஒளித்து வைக்கப்பட்டுள்ளன. மரத்தினாலான பகுதிகள் ரிமோர்ட் கொண்ட்ரோல் முறையில் திறக்கப்பட்டதும் அவை அங்கிருந்து மெலெழுந்து பறந்து சென்று ரஷ்ய வான் தளங்களைத் தாக்கும் விதமாகத் திட்டம் வகுக்கப்பட்டிருந்தது என்றும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதனை உறுதிப்படுத்துவது போன்று ட்ரக் வாகனம் ஒன்றின் மேற்பகுதியில் இருந்து ட்ரோன்கள் கிளம்பிப் பறக்கின்ற வீடியோக் காட்சிகளும் வெளியாகியுள்ளன. சைபீரியா வரை ஆழ ஊடுருவி நடத்தப்பட்ட இத் தாக்குதல் நடவடிக்கைக்கு ’ஒப்பரேஷன் ஸ்பைடர் வெப்’ ( Operation Spiders Web) என்று பெயரிடப்பட்டுள்ளது.

### ரஷ்ய 40 போர் விமானங்கள் அழிப்பு:

ரஷ்யாவின் ஐந்து விமானப்படை தளங்கள் மீது உக்ரைன் ராணுவம் ட்ரோன்கள் மூலம் மிகப்பெரிய தாக்குதலை நடத்தியுள்ளதாக




ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலில் 40க்கும் மேற்பட்ட ரஷ்யப் போர் விமானங்கள் அழிக்கப்பட்டுள்ளதாகவும், ரஷ்யாவிற்கு பாரிய சேதத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் உக்ரைன் தெரிவித்துள்ளது.

ஜூன் முதலாம் திகதி ஞாயிறு நடத்தப்பட்ட உக்ரைனின் பெருந் தாக்குதலை உறுதிப்படுத்தியுள்ள ரஷ்ய அரசு, எதிர்காலத்தில் எத்தகைய பதில் தாக்குதல் நடத்தப்படலாம் என்பது தான் தெரியவில்லை.

ரஷ்யாவுக்குள் மிகத் தொலை தூரத்தில் அமைந்துள்ள வான் தளங்கள் மீது உக்ரைன் நடத்தியுள்ள தொடரான பெரும் ட்ரோன் தாக்குதல்களில் ரஷ்ய விமானப்படை

### ‘ஒப்பரேஷன் ஸ்பைடர் வெப்’

உக்ரைனில் இருந்து பல ஆயிரக்கணக்கான கிலோ மீற்றர்கள் தொலைவில் சைபீரியாவில் அமைந்துள்ள பெலாயா(Belaya), தூர வட கிழக்கில் அமைந்துள்ள ஒலெனியா (நுயிளஐஷ்ழி), மற்றும் டியாகிலெவோ (Dyagilevo), இவானோவோ (Ivanovo) ஆகிய விமானத் தளங்களே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன.

நீண்ட காலமாக திட்டமிடப்பட்டுவந்த இந்தத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள ட்ரோன் விமானங்கள் கப்பல் சரக்குக் கொள்கலன்களைச் சுமந்து செல்கின்ற ட்ரக் வாகனங்கள் மூலமே வான் தளங்களை அண்டிய பகுதிகளுக்கு எடுத்துச்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# ட்ரோன் தாக்குதலில்....

4ம் பக்கத் தொடர்ச்சி...........

பேரழிவைச் சந்தித்திருக்கிறது. நாற்பதுக்கும் மேற்பட்ட போர் விமானங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்று உக்ரைனியப் பாதுகாப்புச் சேவை அறிவித்திருக்கிறது.

அணு ஆயுதங்களைச் சுமந்துகொண்டு நீண்ட தூரம் பறக்கவல்ல பல சண்டை விமானங்களும் அவற்றில் அடங்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ரஷ்யா சந்தித்துள்ள இந்த இழப்பு எண்ணிக்கையைச் சுயாதீனமான வட்டாரங்கள் இன்னமும் உறுதிப்படுத்தவில்லை. எனினும் விமானங்கள் பல எரிந்து வெடித்துச் சிதறுகின்ற காட்சிகள் அடங்கிய வீடியோக்கள் சமூக ஊடகங்களில் வெளியாகி உள்ளன.

ரஷ்யாவின் உள்ளே மிகத் தொலைதூரத்தில் வான் தளங்கள் சில தாக்குதலுக்கு இலக்காகியிருப்பதை ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது. ஆயினும்

சில விமானங்களில் மட்டுமே தீப்பற்றியதாகவும் மக்களுக்கு எந்துப் பாதிப்பும் நேரவில்லை எனவும் அது தெரிவித்திருக்கிறது.

தாக்குதலுக்கு உள்ளான ரஷ்ய போர் விமானங்களில் அணு ஆயுதங்களைத் தாங்கிச் செல்லும் வீற்-95, வீற்-22, னி3 மற்றும் பு-50 போர் விமானங்களும் அடங்கும் என உக்ரேனிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.




## அமைதிப் பேச்சு முறியுமா ?



இதேவேளை திங்களன்று (2/6/25)துருக்கியின் இஸ்தான்புலில் இரண்டாம் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தைகள் நடத்த ரஷ்ய - யுக்ரேன் அதிகாரிகள் செல்லும் நிலையில் தான் இந்த தாக்குதல்கள் அனைத்துமே நடந்துள்ளன.

இரண்டு நாடுகளுக்கும் இடையே இந்தப் போரை எப்படி முடிவுக்குக் கொண்டு வருவது என்பதில் ஒருமித்த கருத்து ஏற்படாமல் இருப்பதால் பேச்சுவார்த்தை மீது குறைவான எதிர்பார்ப்புகளே உள்ளன.

2022 பெப்ரவரியில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் உக்ரேன் மீது முழு அளவிலான போரைத் தொடங்கினார். 2014இல் ரஷ்யா ஆக்கிரமித்த உக்ரேனிய பகுதியான கிரைமியா உடன் சேர்த்து தற்போது 20% உக்ரேன் நிலப்பரப்பு ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ளது.

தற்போது இந்த தாக்குதலின் பின்னர் ரஷ்யாவின் பதிலடி எப்படி இருக்கும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். உக்ரேன் மார்தட்டுவது போல ரஷ்யா பாரிய இழப்பை சந்தித்து இருந்தால், மாஸ்கோவின் பதிலடி அகோரமாகவே இருக்கும் என்பதை ஊகிக்கலாம்.



காலைக்கதிர் Kalaikkathir

## பிரபாகரனின்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

உண்டு.

உள்ளக கட்டுப்பாட்டு பணிகளுக்காகவே கொள்கலன்களில் சிவப்பு மற்றும் செம்மஞ்சள் நிற முத்திரை பதிக்கப்படும். இதனை திருட்டு பொருட்கள் உள்ளது என்று கருத முடியாது. அத்துடன் சிவப்பு முத்திரை பதித்த கொள்கலன்களை பரிசோதனையின்றி விடுவிப்பது ஒன்றும் புதியதல்ல,

இந்த கொள்கலன்கள் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனுக்கு சொந்தமான ஆயுதங்கள் புலம்பெயர் அமைப்புக்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடுவதை முழுமையாக நிராகரிக்கிறேன். 30 வருடகாலமாக விடுதலை புலிகள் இயக்கத்துடனான போர் நிலவியது. ஒருமுறை கூட கொழும்பு துறைமுகத்தின் ஊடாக கொள்கலன்களில் ஆயுதங்கள் கொண்டு வரப்படவில்லை. ஆகவே மக்களை தவறாக வழிநடத்தும் வகையில் சிறப்புரிமையில் இருந்துக் கொண்டு பொய்யுரைப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்

## கொழும்பில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டு மக்கள் பெரும்பான்மை பலத்தை வழங்கியுள்ளார்கள். ஆகவே ஏதும் செய்யலாம் என்ற எண்ணத்தில் ஆளும்தரப்பு தான்தோன்றித்தனமாக செயற்பட்டது. அதிகாரம் நிலையற்றது என்பதை மக்கள் ஜனநாயக ரீதியில் அரசாங்கத்துக்கு ஜனநாயக ரீதியில் எடுத்துரைத்துள்ளார்கள்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் ஆளும்தரப்பின் பின்னடைவை எடுத்துக்காட்டுகிறது. ஆளும்தரப்பின் போலியான வாக்குறுதிகளால் ஏமாற்றமடைந்த மக்கள் அரசாங்கத்துக்கு தக்க பதிலடி கொடுத்துள்ளார்கள்.

வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 161 உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகளில் பெரும்பாலான உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகளில் ஆட்சியமைத்துள்ளோம். எதிர்க்கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடபட்டு பொது இணக்கப்பாட்டுடன் கொழும்பு மாநகர சபை உட்பட ஏனைய மாநகர சபைகளில் ஆட்சியமைப்போம்.

ஊழலை இல்லாதொழிப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள் உறுப்பினர்களை விலைக்கு வாங்கி உள்ளூராட்சிமன்றங்களில் ஆட்சியமைக்க முயற்சிக்கிறார்கள். மக்களாணையில் அர்த்தத்தை ஆளும்தரப்பு விளங்கிக் கொள்ள வேண்டும் என்றார்.

## முறைகேடாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சகல உத்தியோகத்தர்களுக்கும் எதிராக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்திடம் இவ்விடயம் குறித்து வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப்பிரிவு அறிக்கை வெளியிட்டுள்ளது.

அநுதாரபுரம் மேல் நீதிமன்றத்தால் 2025.05.02 ஆம் திகதியன்று சிறைத்தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட கைதிக்கு 2025.05.12 ஆம் திகதியன்று ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட விவகாரம் தற்போது கடும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச்சம்பவம் குறித்து ஜனாதிபதி செயலகம் சனிக்கிழமை தெளிவுப்படுத்தல் ஊடக அறிக்கை ஒன்றை வெளிட்ட நிலையில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடளித்திருந்தது. இந்த முறைப்பாடு குறித்து பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக 2025 வெசாக் பண்டிகையை முன்னிட்டு தெரிவு செய்யப்பட்ட சிறைகைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது. இதன்போது சிறைகைதிகள் பலருக்கு முறையற்ற வகையில் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக 2025.06.06 ஆம் திகதியன்று ஜனாதிபதி செயலகம் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு முறைப்பாடளித்துள்ளது.

அரசுத் தலைவர் செயலகம் அளித்துள்ள முறைப்பாட்டுக்கமைய, குற்றப்புலனாய்வு திணைக்களம் முறையான விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன், சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்திடம் இவ்விடயம் குறித்து வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த ஆவணங்களை பரிசீலனை செய்து உரிய தரப்பினரிடமிருந்து வாக்குமூலம் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசுத் தலைவர் பொதுமன்னிப்பை முறைகேடான வகையில் பயன்படுத்தி ஒருசில சிறைக்கைதிகள் வெசாக் தினத்தன்று விடுவிக்கப்பட்டுள்ளமை விசாரணைகளில் வெளிவந்துள்ளது. இந்த முறைகேடான செயற்பாட்டுடன் தொடர்புடைய சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட அதனுடன் தொடர்புடைய சகல உத்தியோகத்தர்களுக்கும் எதிராக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

முதற்கட்ட விசாரணைகளில் அரசுத் தலைவர் பொதுமன்னிப்பில் விடுவிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்ட சிறைக் கைதிகளுடன் அனுமதியளிக்கப்படாத அல்லது பெயர்குறிப்பிடப்படாத கைதிகளும் விடுவிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகத் தகவல்கள் பதியப்பட்டுள்ளன. இது தொடர்பில் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படும்

## டெங்கு,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளடக்கிய வகையில் புதிய ஆலோசனை வழிகாட்டல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய பாடசாலையின் கல்வி செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பொருத்தமான நடவடிக்கைகளை தயாரிப்பதற்குரிய திட்டங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இந்த வழிகாட்டல்கள் குறித்து அரச மற்றும் தனியார் பாடசாலைகளின் அதிபர்கள், பிரிவெனா பாடசாலையின் நிர்வாகம், தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதிகள் மற்றும் மாகாண கல்வி நிறுவனங்களின் பிரதானிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது

# அரச பொசன் விழாவை முன்னிட்டு 3500 பொலிஸார் பாதுகாப்பு கடமை

அரச பொசன் நிகழ்வை முன்னிட்டு அனுராதபுரத்தை அண்மித்த பகுதிகளில் 3,500 பொலிஸ் அதிகாரிகளை பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து கடமைகள் மற்றும் குற்றங்களை தடுப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாவி மற்றும் நீர்த்தேக்கங்களை அண்மித்த பகுதிகளில் விசேட உயிர் பாதுகாப்பு அதிகாரிகளை கொண்ட குழுக்கள் சிலவற்றை ஈடுபடுத்தவுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

அனுராதபுரம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளை சுத்தப்படுத்துவதற்காக விசேட வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக 500-இற்கும் மேற்பட்ட குப்பைத் தொட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சுற்றுலா கேந்திர நிலைய அபிவிருத்திக்கு மாகாணங்களின் திட்டம் கோரப்படுகிறது

சுற்றுலா கேந்திர நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்காக அனைத்து மாகாணங்களிலும் யோசனைகள் கோரப்பட்டுள்ளன.

அபிவிருத்திக்கான உரிய வேலைத் திட்டங்களுக்கான முன்மொழிவுகளை அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை பிரதியமைச்சர் ருவான் ரணசிங்க தெரிவித்தார்.

மேல் மாகாணத்தில் 4 சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்கான திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

நாடு முழுவதும் உள்ள சுற்றுலாத் தலங்களை அபிவிருத்தி செய்வதற்காக ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சுமார் 2 தசாப்தங்களாக நாட்டிலுள்ள சுற்றுலாத் தலங்கள் உரிய திட்டத்திற்கமைய அபிவிருத்தி செய்யப்படவில்லையென பிரதியமைச்சர் ருவான் ரணசிங்க குறிப்பிட்டார்.

குறித்த இடங்களை அபிவிருத்தி செய்வது அரசாங்கத்தின் பிரதான பணியாகும் என பிரதியமைச்சர் தெரிவித்தார்.



# சிறப்புடை வைகாசித் திரு நாள்!

செந்தமிழ்க் கந்தன் பிறந்த நன்னாளே
சிறப்புடை வைகாசித் திரு நாளாகும்
சந்ததம் அடியார் செந்திரு முருகனை
சிந்தையில் இருத்திடும் திரு நாளாகும்

பொறியில் தோன்றி உருவாய் ஆகி
அருவாய் உருவாய் அமர்ந்தான் குமரன்
விசாகம் குமரன் விளங்க வந்தான்
மேதினி எங்கணும் வியாபித்து நிற்கிறான்

இயற்கை தோறும் இருப்பான் குமரன்
இடமாய் குன்றை தேர்ந்தான் குமரன்
அடக்கினான் அசுரரை அரனின் மைந்தன்
அவனின் பிறப்பே வாகாசி விசாகம்

நினைத்திடு அனைத்தும் கைகூட அடியார்
குமரனை மனத்தில் நிறுத்தியே நிற்பார்
அசுரரை ஒடுக்கி அமரரைக் காத்த
அரனின் மைந்தந் அடி தொழுவோமே

ஒளியினில் பிறந்தான் ஒளியாய் நிற்கிறான்
பழியினை அழிப்பான் பரமனின் மைந்தன்
கலியுகத் தெய்வமாய் விளங்கிடு குமரனை
கைதொழு தடியார் போற்றியே பரவுவார்

நொந்திடும் அனைவரும் கந்தனை வேண்டினால்
வேதனை அகலும் வினைகளும் ஒழியும்
கதாலால் கந்தன் கருணையைப் பொழிவான்
கதறி அழுதால் கைபிடித் தணைப்பான்

விசாகத் திருநாள் வெளிச்சம் நிறைந்தது
வேலவன் யாவர்க்கும் வெற்றியைக் கொடுப்பான்
ஞாலம் அனைத்தும் வேலவன் இருக்கிறான்
வேலனைத் தொழிவோம் விசாக நாளிலே



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண்- ஆஸ்திரேலியா






காலைக்கதிர் Kalaikkathir

# காங்கேசன் தொடருந்து நிலையத்திலிருந்து நேற்று முதல் பொதிகள் சேவை தொடக்கம்

யாழ்.காங்கேசன்துறை தொடருந்து நிலையத்தில் - பொதிகள் போக்குவரத்து சேவை நேற்று தொடக்கி வைக்கப்பட்டது.

அத்தோடு தொடருந்து நிலையத்தில் பயணிகள் ஒய்வு அறையில் நூலகம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது தொடருந்து நிலையவளாகத்தில் மரக்கன்றுகளும் நடப்பட்டன.

நிகழ்வில், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன், மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி, தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன், சண்முகநாதன் ஸ்ரீபவானந்தராஜா, ரஜீவன், தொடருந்து நிலைய அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டிருந்தனர்.



# காங்கேசன்துறையில் புதிதாக எரிபொருள் களஞ்சியம் திறப்பு



யாழ்.காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டுள்ள புதிய எரிபொருள் களஞ்சியசாலை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி கலந்துகொண்டு எரிபொருள் களஞ்சியசாலையைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜனக ராஜகருணா, தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், சண்முகநாதன் ஸ்ரீபவானந்தராஜா, ஜெயசந்திரமூர்த்தி ரஜீவன், தொடருந்து நிலைய அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
•CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
•NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
•வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
•ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
•GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.06.2025இல் வெளியிடப்பெற்றது